129

சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம். 1 | 1905 ௵ மேமீ | நம்பர். 5.

## சாஸ்திர விசாரணை.

சாஸ்திரம் என்றால் பழமையான விதிவாக்கியமென்று சாதாரணமாக நாம் அறிகிறோம். பந்துக்களல்லாத பலஜனங்கள்கூட ஒன்று சேர்ந்து சுகமாய் வாழ்வதற்கும், 'மரணமே வாழ்வுக்கு முடிவு' என்று கொள்ளாமல் சுலபத்தில் அறிய முடியாதிருக்கிற அந்த முடிவைத் தெரிந்துகொள்ளவேண்டியதற்கும், பெரும்பாலும் அவ்விதமான விதிவாக்கியங்கள் நம் முன்னோரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவ்விதிகளின் படி மனிதர்கள் தங்களுக்குரிய கருமங்களைத் தப்பாமல் அநுஸரிக்கவேண்டுமென்னும் கருத்து விளங்கவேண்டியே 'சாஸ்திரம்' என்று அதற்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் பாஷையில் சாஸ்திரம் என்பதற்குச் சரியாயுள்ள 'ஸையன்ஸ்' (Science) என்னும் சொல்லுக்கு 'அறிவு' என்று அர்த்தம். நமது சாஸ்திரங்களில் சொல்லியிருப்பவைகள் மற்ற சாஸ்திரங்களிற்போல நம்முன்னோர்களில் வெகு புத்திமான்களான சிலர் வெவ்வேறு காலங்களில் ஆராய்ந்து பார்த்துச் சொன்ன விஷயங்களாம். ஆனால் மற்ற சாஸ்திரங்களில் சொல்லியிருக்

கிற அவ்வளவு விஷயவேறுபாடுகள் நமது சாஸ்திரங்களில் இல்லாமலிருப்பதுடன் மேற்சொன்னபடி ரஹஸியங்களை*ப் பற்றியே அதிகமாய்ச் சொல்லப்பட்டிருப்பது நமதுசாஸ்திரத்தின் விசேஷம். நாம் இந்த ரஹஸ்யங்களைப்பற்றி ஒன்றும் சொல்லாமல் மற்ற சாஸ்திரங்களில் சொல்லியிருக்கும் விஷயங்களை வகுப்புவகுப்பாய் எடுத்துச் சொல்வோம்.

'அறிவு' என்னும் அர்த்தத்தைக்கொண்ட பெயரிலிருந்தே அவைகளில் சொல்லியிருப்பவைகளெல்லாம் மிகச் சரியானவையென்றும் நமக்கு நன்மைவிளைவிக்கக்கூடியவையென்றும் அறியலாம். சாஸ்திரம் படியாதவர்கள் தங்கள் புத்திக்குப் புலப்பட்டதைக்கொண்டே காரியங்களை நடத்திவருகிறார்கள். அதனால் சிலவேளைகளில் பிசகியும்போகிறார்கள். புத்திக்குறைவுடையவர்கள் அதிகமாய்ப் பிசகுகிறார்கள். நமது புத்திக்குத்தோன்றியது அநேகமாய் அரைகுறையாகவே இருக்கும். இதற்கு உதாரணமொன்று எடுத்துக்கூறுவோம்:—

கண்ணாடி கைதவறிக் கீழேவிழுந்தால் உடைந்துபோகிறது. விளக்கு எரியும்போது அதன் கண்ணாடிச்சிம்னியின் பேரில் தண்ணீர் பட்டால் அது வெடித்துப்போகிறது. தீபத்தின் ஜ்வாலை ஒருபக்கத்தில் அதிகமாய் எரிந்தாலும் அந்தச் சிம்னி வெடித்துப்போகிறது. 'கீழே விழுதல்', 'சூடான கண்ணாடியின்பேரில் தண்ணீர் படுதல்', 'ஒருபக்கத்தில் அதிகமாய்ச் சூடுபடுதல்', என்கிற வெவ்வேறான காரணங்கள் 'கண்ணாடி உடைதல்' என்னும் ஓர் காரியத்தை எப்படிச் செய்யுமென்று யோசித்தவர் சிலரே. அப்படி யோசியாதவர்களுடைய ஆராய்ச்சியறிவு குறைவானதுதான். ஆகையால் போலியுக்திவாதத்தால் கண்ணாடியைப்பற்றி அவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் சில அபிப்பிராயங்கள் அரைகுறையாகவேயிருக்கும். அவைகளில் சில:—

1—கண்ணாடி நெருப்புப்பட்டால் உடைந்துபோகும். 2—ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் வெந்நீர்வைத்தால் அது உடைந்துபோம். 3—பனிக்கட்டியைப் போன்ற மிகக்குளிர்ச்சியான ஒரு பண்டத்தை ஒரு கண்ணாடிப்பேலாவில் வைத்தால்

* கேவலம் வ்யவஹாரத்தால் அறியமுடியாமல் நமது இந்திரியங்களால் அறியக்கூடியவைகளுக்குக் காரணமாயிருப்பதென்று சொல்லப்படுவதைக்குறித்த விஷயங்கள் ரஹஸ்யங்களாம்.

அது உடைந்துபோக நியாயமில்லை. இவ்வபிப்பிராயங்கள் முற்றிலும் சரியானவையுமல்ல, முற்றிலும் பிசகானவையுமல்ல. இவைகளை முற்றும் ஆராய்ச்சிசெய்ய நாம் கண்ணாடியைக் கொண்டு இன்னும் சில பரிசோதனைகளைச் செய்துபார்த்து அப்போது கண்ணாடியில் உண்டாகிற மாறுபாடுகளைக் கவனிக்கவேண்டும்.

பரிசோதனை 1. எரிகிற அடுப்பில் உடைந்த சிம்னித்துண்டு ஒன்றைப்போட்டால் அது உடனே இரண்டுமூன்றாய் உடைந்தாலும் உடைந்த துண்டுகள் மறுபடி உடையாமல் பழுக்கக் காய்வதையும், அப்போது ஒரு குச்சியால் அத்துண்டைக் குத்தினால் அது தோல்போல் வளைந்து போவதையும் காணலாம். அடுப்புமூட்டும் முன்னமே ஒரு துண்டை வைத்து மூட்டினால் அது முதலில் உடையாமற்கூட மற்ற மாறுபாடுகளைமாத்திரம் அடைவதைக்காணலாம்.

இதனால் கண்ணாடியைச் சடிதியில்* சூடாக்கினால் அது உடையுமென்றும், அப்படிச்செய்யாமல் அதற்குக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சூடுகொடுத்தால், அதைப்பழுக்கக் காய்ச்சி இளகவும் உருக்கி அதன் உருவத்தை வேண்டியபடி மாற்றலாமென்றும் தெரிகிறது. இப்படித்தான் கண்ணாடிச்சாமான்களெல்லாம் செய்யப்படுகின்றன. இவ்விதமே அதிகமாய் விளக்கின் சூடுதாக்கிய சில சிம்னிகள் இளகி இருந்திப்போவதையும் சிலர் பார்த்திருக்கலாம்.

பரிசோதனை 2. கனதியான கண்ணாடித்தம்ப்ளர் ஒன்று, ஐஸ் (ice) க்ளாஸ் என்னும் வெண்கலத்தின் சத்தத்தை உடைய மெல்லிய தம்ப்ளர் ஒன்று, இவைகளைக் கொண்டு வந்து வேறோர் பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொதிக்க வைத்து அதைக் கனதியான தம்ப்ளரில் ஊற்ற அது உடனே பல சுக்காக உடைந்துபோகிறது. மெல்லிய தம்ப்ளரில் ஊற்ற அது உடைகிறதில்லை. தவிரவும் இந்தத் தம்ப்ளரை ஜலத்தோடு அடுப்பில் வைத்து ஜலம் ஆவியாய்ப் போகிறவரையில் காய்ச்சலாம்.

---

* சிம்னிவிளக்கைக் கொளுத்தும்போது ஜ்வாலை ஒருபக்கத்தில் அதிகமாக எரியாமல் பார்த்துக்கொள்வதுடன், முதன்முதல் ஜ்வாலை சிறிதாயும் கண்ணாடி கொஞ்சம் சூடுண்டவுடன் வேண்டிய வரையில் பெரிதாயும் பண்ணிக்கொண்டுவந்தால் சிம்னி உடைவதைப் பெரும்பாலும் நீக்கலாம்.

இதனால் இரண்டுதினிசுக் கண்ணாடி இருக்கிறதென்றும், மெல்லிய தினிசு கொஞ்சம் சடிதியில் சூடாக்கப்பட்டபோதிலும் அதனால் உடையாமல் அதைத் தாங்கிக்கொள்ளக்கூடியதென்றும், கனதியான தினிசுக்கு அந்தக் குணமில்லையென்றும் தெரிவதுடன் மெல்லியதினிசு செம்பு தாமிரப்பாத்திரங்களைப்போல் அதன்பேரில் தாக்கும் சூட்டை அதற்குள்ளிருக்கும் ஜலத்துக்குக் கொடுத்துக் கொண்டேயிருக்குந்தன்மையுடையதென்றும் தெரிகிறது.

பரிசோதனை 3. மேற்சொன்னபடி இரண்டு தினிசுந் தம்ப்ளர்கள் கொண்டுவந்து அவைகளில் கொதிஜலத்துக்குப் பதிலாய் இப்போது பனிக்கட்டிகளை வைப்போம். கனதி தினிசு கொதிஜலத்தால் உடைந்ததுபோலவே பனிக்கட்டியால் உடைந்துபோவதைப்பார்க்க ஆச்சரியமாயிருக்கிறது. மெல்லியது உடையக்காணோம்.

இதனால் சூடு, குளிர்ச்சி, என்று சொல்லப்படும் இரண்டும் கண்ணாடியில் ஒரே மாறுபாட்டைச் செய்கின்றன என்றும் மிகவும் சடிதியில் சூடாக்கப்பட்ட மெல்லிய கண்ணாடிகூட உடைவதுபோல் மிகக்குளிர்ச்சியான * பனிக்கட்டியை வைத்த மெல்லிய கண்ணாடியும் உடைந்துபோமென்று ஊஹிக்கலாம்.

கண்ணாடியைப்பற்றிப் போலியுக்திவாதமாய்ச்சொன்ன மூன்று அபிப்பிராயங்களின் குறைவை எடுத்துக்காட்டுவதில் ஒவ்வொன்றுக்கும் சாஸ்திர ஸம்மதமான அபிப்பிராயம் இன்னதென்று சொல்லப்பட்டது. இப்படி ஒவ்வொருவிஷயத்திற்கும் பரிசோதனை செய்துபார்ப்பது அசாத்தியமாகுமேயென்றால், அசாத்தியந்தான். ஆனால் நாம் ஒரு வஸ்துவில் ஒரு காரணத்துக்கும் அதனாலுண்டாகும் காரியத்துக்கும் இருக்கிற சம்பந்தத்தைச் சில பரிசோதனைகளால் முன்னதாக அறிந்துகொண்டால் பிறகு ஊஹமாய் அதைப்பற்றிச் சொல்வதெல்லாம் சரியாகவேயிருக்கும். கண்ணாடியைக்குறித்து மேற்சொன்ன சாஸ்திரஸம்மதமான அபிப்பிராயங்கள் அம்

* ஜலத்தில் குளிர்ச்சி வேறுபடுகிறதுபோல் பனிக்கட்டியிலும் குளிர்ச்சிவேறுபாடுண்டு. இந்தியாவின் தென்பாகமாகிய இவ்விடத்தில் சித்திரை வைகாசிமாதங்களில் கிடைக்கிற பனிக்கட்டியின் குளிர்ச்சி தான் தாழ்ந்தது.

மூன்று பரிசோதனைகளினின்றுமல்லாமல் கண்ணுடி உடைவதாகிய காரியத்துக்கும் அதற்குக்காரணமாய் முதலில் எடுத்துக்கொள்ளப்பட்ட மூன்றுக்கும் உள்ள சம்பந்தத்தை அறிந்துகொண்டால் அதினின்றும் ஊஹிக்கலாம். இதைப் பற்றிப் பின் விவஹரிப்போம்.

(இன்னும் வரும்)

**S. ஸ்ரீரங்காசாரி, B. A. L. T.**

---

# ஆயுள்விருத்தி நூல்.

(87-ம் பக்கத் தொடர்ச்சி)

இதை அனுசரித்ததாய் ஆச்சரியப்படத்தக்க அநேக திருஷ்டாந்தங்களிருக்கின்றன. தான்யங்கள் அநேக வருஷங்களுக்கு ஒரேஸ்திதியில் ஜீவசக்தியைப் பொருந்தியிருக்கவும் முட்டைகள் அநேகமாதங்களுக்கு ஜீவசக்திகெடுதலில்லாத நிலைமையிலிருக்கவும் கூடும். உஷ்ணம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டால் மட்டும் தம்முள் அடங்கியிருந்த ஜீவசக்தியை வெளிப்படுத்திச் செடிகளாகவும் குஞ்சுகளாகவும் உலகத்திற்றோற்றக்கூடிய நிலைமையிலிருக்கின்றன. அதுமாத்திரமல்ல; கொஞ்சகாலம் ஜீவப்பிரவிர்த்தியடைந்து, அடைந்தவரையில் அசைவற்று ஒரே நிலையில் நிற்கக்கூடும். அதற்கு தாரணமாக போலிப்ஸ் (polypes) என்னும் சிலந்திக்கட்டுகளிலும் ஜீவவர்க்கத்தின்றன்மையுடைய தாவரவர்க்க (animal-plants)ங்களிலும் பார்க்கலாம்.

4. அந்த ஜீவசக்தியானது வேறுவேறுவிதமுள்ள அவயவமுடைய பிராணிகளிடத்தில் வெவ்வேறுதன்மையாய்ச் சம்பந்தப்பட்டிருப்பதினுலும் சிலவற்றுள் கொஞ்மாகவும் மற்றும் சிலவற்றில் ஜாஸ்தியாகவும் நிறைந்திருப்பதினுலும் அதின் சேர்க்கையானது சில பிராணிகளிடத்தில் பலப்பட்டும் சிலவற்றில் மலினப்பட்டும் இருக்கிறது. எந்த வஸ்துவில் ஜாஸ்தியான அளவில் பூர்த்தியாய் நிறைந்திருக்கிறதோ அதில் மிகவும்

தளர்ச்சியாகவே கலக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, மிகவும் அற்ப ஆயுளுடைய பட்டாம்பூச்சி அல்லது சிலந்திக் கட்டுகளில் (Polypes), நீண்ட ஆயுள்விருத்தியும் பலமும் பொருந்திய பிராணிகளைப் பார்க்கிலும், ஜீவசக்தியானது மிகவும் பலமாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

5. இந்த ஜீவசக்தியினாலே தான் ஜடவஸ்துவிற்கும் உயிருள்ள வஸ்துவுக்கும் பேதம் ஏற்படுகிறது. ஜடவஸ்துவிற்குப்பொருந்திய சடாரசாயனவிதிகளை (Physical and chemicallaws) ஜீவப்பிராணிகளிடத்தில் முழுவதும் செலுத்திவைக்காமல் செய்கிறது; எப்படியெனில் உஷ்ணமாவது குளிர்ச்சியாவது கொடுக்கப்பட்ட காலத்தில் ஜடவஸ்துக்களிடத்தில் வேறுபாடு ஏற்படுகிறதுபோல் ஜீவப்பிராணிகளிடத்தில் ஏற்படுகிறதில்லை. அதற்குக்காரணம் பிந்தினவைகளில் ஜீவசக்தி நிறைந்திருப்பதினால்தான். அதோடும்கூட ஒரே நிலத்தில் வளருகிற பலவிதமான செடிகளுக்கு ஒரேவிதமான ஆகாரம் கிடைத்தபோதிலும், ரூபம், சத்து, குணமாகிய இவைகளில் அவைகள் இனத்திற்குத் தகுந்தபடிவேறுபட்டேயிருக்கின்றன. இதினாலேதான் "ஒவ்வொருவர்க்கும் தனித்தனியான இயற்கை ஏற்பட்டிருக்கிறது", (Every one has his own peculiar nature) என்று சொல்லப்படுகிறது.

6. ஜீவசக்திதான் ஜீவப்பிராணிகளுக்கு முக்கிய ஆதாரமாயிருக்கிறது. அதினாலேதான் ரசாயனவிதிக்குப் பொருந்திய ஆகாயம் (atmosphere), உறைபனி, அழுகல் (Putrifaction) ஆகிய இவைகளின் காரியங்களால் ஜீவப்பிராணிகள் நாசமடையாமலிருக்கின்றன. உதாரணமாகச் சொல்லுவோமானால், உறைபனி மிகுந்துள்ள தெற்கு வடக்குத் துருவங்களில் (poles) ஜீவப்பிராணிகள் உயிர்வாழ்வதும், முட்டை, தானியம், பட்டுப்பூச்சி முதலியவைகளில் ஜீவசக்தி மந்தகரம் (inactivity) அடைந்தபோதிலும் அவைகள் கெடாமலிருப்பதும் கூறப்படலாம்.

7. ஜீவசக்தியானது ஓர் ஜீவனினின்றும் பிரிந்தவுடன் அவைகளின் அவயவங்கள் ஜடவஸ்துவாய் ஜடவஸ்துவின் ஒழுங்கின்படிக்கு எல்லாமாறுதல்களையுமடைகின்றன. ஆனாலும் சீவசக்தியானது எந்தச் சீவப்பிராணிகளுடைய அவயவங்களினின்றும் பிரிந்தோ அந்த அவயவங்களை அநேக

பிராணிகள் உற்பவிப்பதற்கு இடமாக்குகிறது. கெட்டுப் போன சீவப்பிராணிகளின் அவயவங்களினின்றும் அநேக சிறு புழுக்களும் புற்பூண்டு செடிகளும் உற்பத்தியாவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா? கொஞ்சகாலம் செல்ல முன்னிருந்ததைவிட வுயர்ந்த பதவியுள்ள பிராணிகளாக உற்பவிக்கக்கூடும். இந்த மேலான எண்ணத்தோடு தான் சீவசக்தியானது ஒரு ஜீவனைவிட்டு விலக நேருகிறது.

8. ஆன்ம சக்தியானது சில காரணத்தினால் பலஹீனப்பட்டும் சில காரணத்தை முன்னிட்டு முற்றிலும் நாசமடையவும் கூடும்; மற்றும் சில காரணத்தினால் அது போஷிக்கப்பட்டுப் பலமடையவும் கூடும். சீவசக்தியை நாசப்படுத்துகிறவைகளில் குளிர்ச்சியைத்தான் முதன்மையாகச் சொல்லவேண்டும். (ஆனால் மிதமான குளிர்ச்சி சீவசேதப்படுத்தாது). இதைத்தவிர சில விகற்பங்களினால் சீவசக்திக்குக் கேடு விளையக்கூடும். உதாரணமாக மின்னல், மின்சாரத்தின்றாக்குதல் (Electric shocks) களினால் சீவ தாவர வஸ்துக்களுக்கு வெளிப்படையாக அவைகளின் அங்கங்களுக்கு யாதொரு விக்கினமும் நேராமல், அவைகளுக்குப் பிராணசேதம் வரக்கூடும். மேலும் சில சமயத்தில் திடீர் என்ற பயங்கரத்தினாலாவது அளவிறந்த சந்தோஷத்தினாலாவது பிராணிகளின் மனம் சலனமடைந்து உயிர்ச்சேதமும் சம்பவிக்கும். கடைசியாகச் சில சடவஸ்துக்களினுடைய வல்லமையினால் மேற்சொன்னவாறு பிராணநஷ்டமும் நேரும். அவைகள் தான் விஷபாஷாணங்கள், தொற்றுவியாதிகள், கசப்புவாதுமை எண்ணெய் முதலியவைகளாகும்.

ஜீவசக்திக்கு நாசகாரிகளிருப்பதுபோலவே அதை பலப்படுத்தி அதற்குத் துணையாய் நின்று அதை விர்த்திக்குக் கொண்டுவரக்கூடியவைகளும் இருக்கின்றன. அவைகள் வெளிச்சம், உஷ்ணம், பிராணவாயு என்பவைகளாகும்.

முதலாவது வெளிச்சத்தைப்பற்றிப் பேசுங்கால், அதுவே ஜீவனுக்கு அந்தரங்க சிநேகிதனும் நெருங்கிய பந்துவுமாயிருக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு பிராணிக்கும் ஒவ்வொரு செடிக்கும் வெளிச்சக்குறைவு ஏற்படும் பக்ஷத்தில் அது விர்த்திக்கு வரமாட்டாது. ஆரம்பத்தில் அதின் நிறம் மாறுதலடைந்து வெளுத்துப் பலவீனப்பட்டுக் கடைசியில் பிராண

ஹானி நேரிடும். கல்கத்தா இருட்டறையில் (Black Hole of Calcutta) சிராஜ்-வுட்-டவுலா (Siraj-ud-dawla) கைதிகளை அடைத்த காலத்தில் அவர்களிற் பெரும்பாலார் இறக்க நேர்ந்ததற்குக் காரணம் பிராணவாயு (Oxygen) குறைவாகிய காரணத்தோடும் வெளிச்சக் குறைவும் ஓர் முக்கியகாரணமாகவே சொல்லவேண்டியிருக்கிறது. மேலும் வெளிச்சக்குறைவான இருட்டுக் குகைகளில் காளான் பாசி முதலியவைகளைத் தவிர்த்து யாதாமொரு தாவர ஜீவவஸ்துக்களிருக்கப் பார்த்ததில்லை.

இரண்டாவது, உஷ்ணம்;-இதுவும் ஜீவனுக்கு அத்தியந்த உதவித் துணைவனாகும். அதுவே ஜீவனுடைய அசைவுக்குக் காரணமாயிருக்கிறது. குளிர் நிறைந்த மாரிகாலத்தில் இயற்கையானது மரண மடைந்ததுபோற் றோற்றப்பட்டு, உஷ்ணம் பொருந்திய வசந்தகாலத்தில் தன்னுடைய முழுஜீவ சக்தியையும் வெளிப்படுத்த ஆரம்பிக்கிறது. அப்போதுதான் தாவர வர்க்கங்கள் தளிர்த்து ஜீவப்பிராணிகள் குதூகலத்தை அடைகிற காலமாயிருக்கிறது. துருவத்திற்குச் சமீபத்திலுள்ள தேசங்களை நோக்கும் பக்ஷத்தில் குளிரைத் தாங்கக் கூடிய திமிங்கிலங் கரடி முதலியவைகளைத் தவிர இதர ஜீவப் பிராணிகள் உயிர் வாழ்வதாகத் தெரியவில்லை. சுருங்கச்சொல்லின் ஜீவன் உள்ள இடத்தில் உஷ்ணமும் உஷ்ணமுள்ள இடத்தில் ஜீவனும் அபின்னமாய்ப் பொருந்தியிருக்கின்றன. ஆகையால் இவைகளில் காரணம், காரியம், (Cause & Effect) இன்னவையென்று சொல்லக்கூடாதபடிக்கு ஒன்றோடொன்று இவைகள் நெருங்கிய சம்பந்தமுடையவைகளா யிருக்கின்றன. உஷ்ணமானது ஜீவனைப் போஷிப்பதற்கும் அசைப்பிப்பதற்கும் அத்தாட்சியாகப் பின்வரும் சங்கதி முதனூலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

1790-ளூ ஆகஸ்டுமாதம் 2உயில் ஜர்மனிதேசத்திலுள்ள ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) என்ற பட்டணத்தில் பெட்டிட் (Petit) என்னும் நாமதேயமுள்ள போர்ச்சேவகன் வியாதியா யிருந்தகாலத்தில் அவன் வைத்திய சாலையின் சன்னல் வழியாய் ரைன்நதியில் (The Rhine) நிர்வாணமாய்ப் பாய்ந்து விழுந்தான். அவன் விழுந்து சுமார் அரைமணிநேரத்திற்குப் பிறகு, பார்வையிடப்பட்டு அவனுடைய சரீரத்தை ஜலத்தி

னின்றும் எடுத்த காலத்தில் அது மரித்த சவம் போலவே இருந்தது. உடனே அந்தச் சரீரத்தை உஷ்ணமுள்ள ஓர் படுக்கையிற்கிடத்தித் தலையை உயர்த்தியும், கைகால்களை ஒழுங்காய் நீட்டியும் வைக்கச்செய்து உஷ்ணமான வஸ்திரங்களை வயிற்றிலும் கால்களிலும் மூடிக் கற்களைச் சூடுசெய்து துணியினுல் மூடி ஒத்தடம் செய்யப்பட்டபோது 7,8 நிமிஷம் சென்றதும் கண்ணிமைகளில் அசைவுண்டாகியது. சற்றுப் பொறுத்துப் பற்கள் கிட்டித் தாழ்வாய் திறக்கப்படாமலிருந்ததானது திறக்கப்பட்டு வாய்வழியாய் நுரைதள்ள ஆரம்பித்துக் கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவன் பேசவும் ஆகாராதிகளைப் புசிக்கவும் ஆரம்பித்தான். இது ஜீவனுக்கு உஷ்ணம் எவ்வளவு அத்யாவசிய மென்பதைத் தெற்றென விளக்குகிறதல்லவா? ஆதலால், உஷ்ணமே ஜீவசக்தி மலினமுற்ற காலத்திற்கூட அதின் சிறு அக்கினிப் பொறியைப் போஷித்து அதைவளர்ப்பித்துத் திரும்பவும் சிவாக்கினிச் சுவாலையாகவும் செய்கிறது.

மூன்றாவது, ஆகாயம்—நாம் யாதாமொரு பிராணியாவது வாயு அல்லது ஆகாயமில்லாமற் ஜீவித்திருக்கப் பார்த்ததில்லை. சில சமயங்களில் ஆகாயக் குறைவுண்டானவுடனே சீவன்கள் மரிக்கப்பார்த்திருக்கிறோம். ஜீவனுக்கு இன்றியமையாததாகிய பிராணவாயு சாதாரண ஆகாயத்தில் கலந்திருக்கிறது. அந்தப் பிராணவாயு ஆச்சரியமும் புத்தி நுட்பமும் கொடுக்கக்கூடிய ரசாயன சாஸ்திர வல்லபத்தால் இப்போது ஆகாயத்தினின்று பிரிக்கப்பட்டுப் பிரத்தியேகமாய்ச் சீவர்களுக்குச் சுவாசமாய் உட்கொள்ளக் கொடுக்கப்பட்ட காலத்தில் மிகவும் திடத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கக்கூடியதா யிருக்கிற தென்பதையும் பரீக்ஷித்துப் பார்க்கப்பட்டிருக்கிறது. ஆகாயம் என்னும் பதமானது இந்துசாஸ்திரத்திலும் ஆங்கில சாஸ்திரத்திலும் வெவ்வேறு அர்த்தங்களைப் பெறுகின்றது. இவ்விடத்தில் கொஞ்சம் எடுத்துரைக்கக் கடமைப்பட்டவனா யிருக்கிறேன். நம்மவர்கள் ஆகாயம் என்பது பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் பஞ்சபூதங்களி லொன்றென்றும்; பிரிதிவி அப்புவிலும், பிரிதிவி அப்பு தேயுவிலும், பிரிதிவி அப்பு தேயு வாயுவிலும், பிரிதிவி அப்பு தேயு வாயு இவைகள் ஆகாசத்திலும், அடங்கக்கூ

டியதென்றும்; ஆகாசம் மற்றவைகளி லடங்கக்கூடிய தல்லவென்றும்; ஆகையால் ஆகாசம் பூர்ணமானதால் அது மற்றவைகளைப்போல் மற்றொன்றால் ரூபமாறக்கூடிய தல்லவென்றும் அல்லது நாசப்படுத்தப்படக்கூடிய தல்லவென்றும், சொல்லுகிறார்கள். ஆகாசமில்லாத இடமே கிடையாது. அதைச் சூன்யப்படுத்த முடியாதென்பது நம்மவர் கொள்கை. ஆங்கிலத்தாருடைய கொள்கையோ அத்தன்மைத்தன்று. அவர்கள் இவைகள் பூதம் (Element) அல்லவென்றும் ஒவ்வொன்றும் பாகுபாடுடையதென்றும் ஆகாயமும் மற்றொன்றால் சூன்யப்படுத்தக்கூடியதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லுகிற ஆகாயம் நம்மவர்கள் கொள்கைக்குரிய வாயுவென்றே குறிப்பிடவேண்டும். இது நிற்க, பிராண வாயுவானது சுத்த ஜலத்தின் ஓர் கூறு அல்லது பங்காய் அமைந்திருப்பதினால்தான் "நீரே பிராணாதாரம்" என்று அனுபவார்த்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் வெளிச்சம், பிராணவாயு, உஷ்ணம் ஆகிய இவை மூன்றும் ஜீவசக்தியைப் போஷிப்பதற்குமுக்கிய ஆதாரமாயிருக்கின்றன. அப்படிக்கில்லாத பட்சத்தில் தாவர ஜீவவர்க்கங்கள் மேற்சொன்னவைகளைத் தவிர வேறு போஷணையில்லாமலே நீண்டகாலம் எவ்வண்ணம் உயிர் வாழக்கூடும்! ஒரு முட்டையிலுள்ள கோழிக்குஞ்சானது கிஞ்சித்தேனும் ஆகாரமில்லாமல், முட்டைக்குள்ளேயே அவயவமுண்டாகிப் பிராணனை அடைந்து விர்த்திக்கு வரவும் தாவர வர்க்கத்தில் சில ஜலத்திலுள்ள நீராவியின் உதவியைக்கொண்டே முளைத்துத் தளிர்த்துப் புஷ்பிக்கிறவைகளையும் நாம் பார்க்கிறோம்.

(இன்னும் வரும்.)

**S. குமாரசாமி மேற்கொண்டார்.**

# ஆரியர்களின் ஸங்கீத முறை.

(60-ம் பக்கத்தொடர்ச்சி.)

அதேமாதிரியாய், ப த நி ஸ என்று நாலு உத்தரஸ்வரங்களுள்ள கணங்கள் (Upper Tetrachords) ஆறு உண்டாகும் என்பதையாரும் ஊகிக்கலாம். அவை பின்வருமாறு.

(1) ப $த_1$ $நி_0$ ஸ'
(2) ப $த_1$ $நி_1$ ஸ'
(3) ப $த_1$ நி ஸ'
(4) ப த $நி_1$ ஸ'
(5) ப த நி ஸ'
(6) ப $த_2$ நி ஸ' என்பதே.

மேலும், ஸ ரி க ம என்னும் பூர்வஸ்வரகணங்களில் உள்ள ஆறுபேதங்களில், முதல் பேதத்தை எடுத்துக்கொண்டு ப த நி ஸ வின் ஆறுபேதங்களோடு ஒவ்வொன்ருக நாம் சேர்த்து அப்படிச் சேர்த்த ஸ்வரங்களைத் திருப்பிவாசித்தோமானுல் ஆறு ராகங்கள் உண்டாகின்றன. இந்த ஆறு ராகங்களுக்கும், கநகாங்கி, ரத்நாங்கி, காநமூர்த்தி, வநஸ்பதி, மாநவதி, தாநரூபி என்று பெயரிட்டிருக்கிருர்கள். இந்த ஆறு ராகங்களிலும், தைவத நிஷாதங்கள் தவிர வேறு ஸ்வரங்களில் பேதமே கிடையாது. அந்தப் பேதமும் பிரஸ்தாரத்தால் ஏற்பட்ட பேதமாகையால் இந்த ராகங்களுக்கு ஒரு சக்ரம் என்று பெயரிட்டிருக்கிருர்கள். மேலே சொன்னமாதிரி அவ்விராகங்களுக்குப் பெயர்கள் வைக்கக் காரணம் உண்டு. ஸமஸ்கிருத பாஷையின் எழுத்துக்களைப் பார்த்தால், கவர்க்கம், சவர்க்கம் டவர்க்கம், தவர்க்கம், பவர்க்கம் என்று அவ்வைந்து அக்ஷரங்களுள்ள வர்க்கங்களிருக்கின்றன வல்லவா? அதில், க வர்க்கத்தில் உள்ள ஐந்தும், ச வர்க்கத்திலுள்ள முதல் நாலு அக்ஷரங்களாகின்றன. அந்த ஒன்பது அக்ஷரங்களும், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, என்னும் எண்களுக்கு முறையே ஸங்கேதமாக ஏற்படும். அதே மாதிரி, ட வர்க்கம் ஐந்தையும் த வர்க்கம் நாலோடு சேர்த்து மேலே சொன்ன எண்களுக்கு இன்னொரு ஸங்கேதமும் அமைத்திருக்கிருர்கள். ப வர்க்கத்திலுள்ள

ஐந்து எழுத்துக்களும், 1, 2, 3, 4, 5, என்னும் எண்களுக்கு ஸங்கேதமாகின்றன. பிறகுள்ள ய, ர, ல, வ, ச, ஷ, ஸ, ஹ, என்னும் எட்டு அக்ஷரங்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, என்னும் எண்களுக்கு ஸங்கேதமாகும்.

கநகாங்கி என்னும் ராகத்தின் பெயரில் முதல் இரண்டு அக்ஷரங்களையும் எடுத்தால், முதல் அக்ஷரமாகிய க என்பது ஒன்றுகளின் ஸ்தாநத்தில் உள்ள எண்ணைக்குறிக்கும். இரண்டாம் அக்ஷரமாகிய ந என்பது பத்துக்களின் ஸ்தாநத்தில் உள்ள எண்களைக் குறிக்கும். க என்பது கவர்க்கத்தில் முதல் அக்ஷரமாகையால் 1 என்பதைக்குறிக்கும். ந என்பது பூஜ்யத்தைக்குறிக்கும் ஆகவே, கநகாங்கி என்னும் பெயருக்கு முதலாவது ராகம் என்று அர்த்தமாகும்.

அதே மாதிரியாக, ஸ, ரி$_1$, க$_1$, ம, என்பதோடு பதநிஸவின் ஆறு பேதங்களுடன் கிரமமாகச் சேர்த்தால் இன்னொரு ஆறு ராகங்களுள்ள அடுத்த சக்ரம் உண்டாகும்.

இவ்விதமாக, மொத்தத்தில் முப்பத்தாறு பேதமுண்டாகின்றன. இந்த முப்பத்தாறு ராகங்களும் சுத்தமத்யமமுள்ள ராகங்களாகும்.

இந்த முப்பத்தாறு ராகங்களிலும் சுத்த மத்யமத்துக்குப் பதிலாக பிரதிமத்தியமத்தை வைத்துவிட்டோமேயானால் இன்னொரு முப்பத்தாறு ராகங்கள் உண்டாகும்.

ஆகவே, எழுபத்திரண்டு ராகங்களுண்டாகின்றன. இந்த எழுபத்திரண்டு ராகங்களுக்கும் மேளராகங்கள் என்றும், மேளகர்த்தாக்கள் என்றும், ராகாங்க ராகங்கள் என்றும், ஸம்பூரண ராகங்கள் என்றும், ஜநகராகங்கள் என்றும் பலவிதமான பெயர்கள் வழக்கத்திலிருக்கின்றன.

இவ்விதமாக மேலே சொல்லப்பட்டிருக்கும் ராகங்களின் பிரஸ்தாரக்கிரமத்தை நாம் தெரிந்து கொள்வதின் பிரயோஜனம் என்னவென்று நாம் பார்ப்போம். முன்காலத்தில் புஸ்தகங்களை அச்சுப்போட்டுப் பிரசுரம் செய்யும் ஸாதனம் ஏற்படாமலிருந்ததினால், கற்கும் மாணாக்கர்கள் எதைக்கற்றுக் கொண்டாலும் அதைத் தம் ஞாபகத்தில் தரித்துக்கொள்ள வேண்டியதாகவே இருந்தது. அவர்களின் ஞாபகசக்தியைக் கொண்டு வெகு விஷயங்களை மனதில் வைத்திருந்தார்கள் என்

பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆசாரியர்கள் தம் மாணுக்கர்களுக்கு நிகண்டு, சூத்திரங்கள் முதலிய குறுக்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுத்து ஒத்தாசை செய்தார்கள் என்பது யாரும் கவனித்தால் அறியக்கூடிய விஷயமே. அந்தக்காலத்துக் கொத்தபடி, இந்த ராக பிரஸ்தாரமும் அவ்விதமான குறுக்கு வழிகளில் ஒன்ருகும். பிரஸ்தரித்து ஏற்பட்டிருக்கும் ராகங்களை எடுத்துக்கொண்டால், முதலில், அந்த ராகங்களின் பெயரில் முதல் இரண்டு அக்ஷரங்களைக்கொண்டு அவை அவை இத்தனையாவது ராகம் என்று கண்டு கொள்ளலாம். பிறகு அந்த எண்ணிக்கையை ஆறால் வகுத்தால், வரும் மிச்சம், தைவத நிஷாதப் பிரஸ்தாரத்தில் எத்தனையாவது பிரஸ்தாரம் அந்த ராகத்துக்கு உரியது என்பதைக் குறிக்கிறது. இந்த வகுத்தலாலேயே இந்த ராகம் எத்தனையாவது சக்ரம் என்பதையும் அறியலாம். எப்பொழுது இன்ன சக்ரம் என்று தெரிகிறதோ, அப்பொழுது ரிஷபகாந்தாரப் பிரஸ்தாரத்தில் இத்தனையாவது பிரஸ்தாரம் இவ்விராகத்துடையது என்பது தெரிந்து விடுகிறது. மேலும், அந்த ராகத்தின் எண்ணிக்கை முதல் முப்பத்தாறு ராகங்களில் ஒன்ருனுல் அது சுத்த மத்யமமுடையது என்றும், அடுத்த முப்பத்தாறு ராகங்களில் ஒன்ருனுல் பிரதிமத்யமமுள்ளதென்றும் அறிந்து கொள்ளலாம்.

(இன்னும்வரும்)

**P. S. ஸுந்தரம் அய்யர், B. A. L. T.**

---

# பூகம்பமும் எரிமலையும்.

(88-ம் பக்கத்தொடர்ச்சி.)

பூகம்பம் நேரிட்டால் அதின் இயக்கம் முக்கியமாய் பூமியின் பரப்பை அதிகப்படுத்துமென்று முன்னரே கூறினேம். ஆனல் சிற்சில சமயங்களில் நில அழிவைச் செய்யுமென்று பின்னர் அறைந்தோம். அலைகளுக்கு இணங்கச் சமீபத்தில்

நேரிட்ட பூகம்பங்களினால் நன்கு விளக்குவோம். சென்ற வருஷம் நவம்பர் மாதம் 14௳ தெக்ஷிண ஜப்பான் தீவுகளிலொன்றாகிய பானின் (Bonin) தீவுக்கருகிலுள்ள ஐவோ(Iwo) தீவில் வசிக்கிற ஜனங்கள் இடிமுழக்கம்போன்ற ஓர் தொனியைக் கேட்டு மிகவும் கலங்கினார்கள். அந்த அரவம் ஜப்பானியர்கள் மேல் போர்க்கோலங்கொண்ட ருஷியர்களின் சண்டைக் கப்பல் பீரங்கிகளினால் உண்டாகியதென்று ஐயுறுதற்கிடமில்லை. ஏனெனில் அவர்கள் கப்பற் சண்டையில் தோற்றதால் போர்ட் ஆர்தர் (Port Arthur) துறைமுகத்தில் உடைந்த சில கப்பல்களுடன் வெளியுலாவமுடியாது தங்கும்படி நேரிட்டது. அதுவுமன்றி, அம்முழக்கம் பூமியின் கீழ் நேரிட்டதென்று அறிந்தார்கள். ருஷியர்கள் பூமியின் கீழ் சுரங்கம் செய்துகொண்டு, மருந்து முதலியவைகளை மறைத்துவைத்துப் பகைவர் யுத்தத்தில் நெருங்கிவரும்போது அக்குண்டுகள் மின்சார சக்தியால் வெடிக்குமாறு செய்தார்களோ என்று நினைக்க இடமில்லை. ஏனெனில் ருஷியர்கள் போர்ட் ஆர்தரில் முற்றுகை போடப்பட்டு வெளியேற இடமின்றி எலிப்பொறியிலகப்பட்ட எலிகள்போல ஆகாரமின்றி வலுக்குறைந்து நின்றார்கள். மேலும் போர்ட் ஆர்தரிலிருந்து ஐவோ (Iwo) என்னும் தீவு வெகு தொலையிலுள்ளது. பின்னர் அத்தொனி என்னவெனின் பூகம்பம் நேரிடுமுன் பூமியின் கீழ் உண்டாகும் ஓர் குழப்பமேயாம். இதுநேரிட்ட பதினைந்து தினத்திற்குப் பிறகு ஐவோ தீவிற்குத் தெற்கில் சமுத்திரத்தில் மூன்றுமைல் தூரத்தில் வெண்மையும் கருமையும் மிகுந்த புகை மேலே கிளம்புவதையும், அவ்விடத்தில் நீர்மேல் நெருப்பு கொழுந்துவிட்டெரிவதுபோன்றதோர் காக்ஷியையும் அத்தீவின் கடலோரமாய் வசிக்கிற ஜனங்கள் கண்டார்கள். அவர்கள் அக்காக்ஷியைப் பார்க்குந்தோறும் அது அவர்களுக்கு மேன்மேலும் ஆச்சரியத்தை விளைவித்தது. டிசம்பர்ஸ்ரீ 5௳ மேகபடலம் போன்ற அப்புகைக்கூட்டத்தின் மத்தியில் ஏதோ சில வஸ்துக்கள் சமுத்திரத்தினடியினின்றும் மேலே கிளம்பிவரக்கண்டார்கள். மூன்று நாள் சென்ற பிறகு அவைகள் மூன்று தீவுகளாகப் புலப்பட்டன. ஐவோ தீவிலுள்ள ஜனங்கள் தங்கள் தங்கள் தொழில்களை விட்டு இந்த விநோதக் காக்ஷியைக் காணக் கடற்கரையோரம் வந்து சேர்ந்தார்கள்.

கடலினடியிலுள்ள எரிமலை கற்குழம்பைக் கக்குவதால் இவ்வித் காக்ஷி உண்டாயதென்று அவர்கள் தீர்மானித்தார்கள். வெளிப்பட்ட புகையின் நிறம் சிற்சில சமயங்களில் வெவ்வேறு நிறமாகப் புலப்பட்டது. டிசம்பர்மீ 12உயில் அத்தீவுகள் ஒரு பெருந் தீவாக ஒன்றுசேர்ந்து சமுத்திர நீர் மட்டத்திற்கு மேல் மெள்ளமெள்ள உயர்வதை அவர்கள் கண்டார்கள். பிறகு அத்தீவின் கிழக்குப்பாகத்தில் குன்று ஒன்றிருப்பதையும் அத்தீவின் சரிவு மேற்கு நோக்கியிருப்பதையுமறிந்தார்கள். பிறகு 15 தினத்தில் அதாவது இவ்வருஷம் ஜனவரிமீ 2உயில் அத்தீவு மத்தியினின்றும் ஒரு வேறுபாட்டையடைந்ததில் மேற்குப்பாகம் உயர்ந்து கிழக்குப்பாகம் கொஞ்சம் தாழ்ந்துபோயிருப்பதையறிந்து ஐவோ தீவின் ஜனங்கள் மிகவும் வருந்தித் தங்கள் தீவுக்கென்ன ஆபத்து நேரிடுமோவென்று திகிலடைந்தார்கள். அத்தீவிலுள்ள ஜனங்கள் ஓர் சங்கம் கூடினார்கள். அப்போது அச்சங்கத்தின் தீர்மானப்படி பத்து மனிதர்கள் தங்களுக்கு என்ன ஆபத்து நேரிடினும் அதற்கஞ்சாதவர்களாய் அக்காக்ஷி தோன்றுமிடத்திற்குப் போய் அத்தீவின் தன்மையைப் பரிசோதித்து வருவதற்குத் துணிந்தார்கள். அவர்கள் முப்பது அடி நீளமுள்ள ஓர் படகில் தங்களுக்குப் பலநாள்களுக்கு வேண்டிய ஆகாரங்களை நிறைத்துக்கொண்டு என்ன ஆபத்து நேரிடினும், என்ன தடங்கல் நேரிடினும் அவைகளுக்கஞ்சாமல் பயணமாய் அத்தீவை நோக்கிச் சென்றார்கள். இந்த வன்மையும், அஞ்சா நெஞ்சும் படைத்த இவ்வீரர்கள் புதிதாக உண்டான அத்தீவினிடத்துப் பிப்ரவரிமீ 1உ வந்தார்கள். அத்தீவு இரண்டேமுக்கால் மைல் சுற்றளவுள்ளதென்றும் சமுத்திர நீர்மட்டத்திற்குமேல் 480 அடி உயரம் உயர்ந்திருப்பதையும் கண்டார்கள். அத்தீவின் வடக்கில் ஒரு பெரிய ஏரியின் நீர் கொதித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அதன் தெற்குக் கடற்கரையோரம் மண்ணினால் மூடப்பட்ட உயர்ந்த செங்குத்தான கற்பாரைகளாக இருப்பதை அறிந்தார்கள். அத்தீவின் உயர்ந்தபாகத்தில் ஓர் ஸ்தம்பமொன்று நாட்டி அதில் ஜப்பானியரின் கொடிகளைக் கட்டிப் பறக்கவிட்டதுமன்றிப் பின்வரும் கருத்துள்ள வார்த்தைகளை எழுதிய ஓர் கொடியையும், சிலையையும் அவ்விடத்தில் ஸ்தாபித்தார்கள்.—"புதியதீவு", "பெரிய ஜப்பான்".

இத்தீவைக் கண்டுபிடித்த சமாசாரத்தைப் பாணின் தீவிலுள்ள கவர்னருக்குத் தெரிவித்தார்கள். அவர் அப்புதிய தீவுக்கு "நுஷிமா" என்று பெயரிட்டார்.

(இன்னும் வரும்.)

**K. இராமாநுஜ ஐயங்கார்.**

---

# கோவிலின் வெளிப்பிராகாரம்*.

## முதல் உபந்நியாசம்—தூய்மை.

ஜீவராசிகள் விதையுள் எவ்வாறு மரத்தின் அம்சம்பொருந்தியுள்ளதோ அதைப்போலத் தம்முள்ளே பதிந்துகிடக்கின்கின்ற திவ்விய குணங்களை மலர்த்திக் கொள்ளவேண்டிப் பலகோடி ஜன்மங்கள் எடுக்கின்றன. அச்சீவன்களின் கதியையறிந்து கொள்ளவும், அவைகள் பிறந்திறந்துழல்வதற்கு அரங்க பூமியாகவுள்ள சப்ததீவுகளின் கோவையைத் தெரிந்துகொள்ளவும், எம்மாற்கூடுமானல் சர்வசிலாக்கியந்தான். ஆனல் உள்ளது உள்ளபடியே அறிந்துகொள்வது அசாத்தியமாய் இருக்கிறது. சில தீவுகள் மானஸபூமியிலும் சில தீவுகள் காமபூமியிலும், சில தீவுகள் ஸ்தூலபூமியிலும் உள்ளன வென்கிறார்கள். அவைகளைப்பற்றி ஆழ நினைத்தால், இப்போது எடுத்துக் கூறவேண்டியது விரிந்துபோம். ஆதலினல் சப்ததீவுகளின் அமைவையும் ஜீவராசிகளின் பிரயாணத்தையும் ஒருவாறு கற்பனைசெய்து கூறிக்கொண்டுபோவோம்.

அகண்ட வெட்ட வெளியிலே உன்னதமான மலையொன்றுளது. அதன்மேல் ஒருபாதை சுற்றிச் சுற்றி ஓடுகிறது. அப்பாதையில் திரும்புமூலைகள் ஏழுள்ளன. ஒவ்வொரு வளைசலிலும் ஏழுதங்குமிடங்களுள்ளன. இந்த ஒவ்வொரு கட்டங்களிலும் பிரயாணிகள் நின்று நின்று செல்லுகிறார்கள். ஒவ்வொரு கட்டங்களிலும் வழி சுழன்றுசுழன்றேபோகிறது.

---

* [இது அன்னிபெஸண்டு அம்மாள் 1895ஆம் ஆகஸ்டுமீ லண்டன் நகரிற் செய்த ஐந்து உபந்நியாசங்கள். இந்த உபந்நியாசங்கள் மிகவும் அழகுள்ளனவாதலால்; அவைகளின் கருத்தை ஒருவாறு எடுத்துக் கூறத் துணிந்தேன்.—பத்திராதிபர்]

இச்சுழன்ற வழியைக்கவனித்துப் பார்த்தால், அது அம்மலையின் சிகரத்திலுள்ள ஒரு பெரிய கோவிலில் சென்று முடிகிறது என்று தோற்றுகிறது. அக்கோவில் தவளமான சலவைக்கல்லால் இழைக்கப்பட்டு, கோடி சூரியப்பிரபையோடு விளங்குவதாய், நீலநிறங் கவிந்த ஆகாசமெல்லாம் சோதியைப் பரப்பிக்கொண்டு நிற்கிறது. பிரயாணிகளின் நோக்கம் இக்கோவிலே, இக்கோவிலைச் சென்று சேர்ந்த பிரயாணிகளுக்கு அவர்கள் கதி முடிந்துவிட்டது. அம்மலையையுத்தேசித்தமட்டும் அவர்கள் செய்யவேண்டிய வேலைகள் ஒன்றுமில்லை. என்றாலும், கோவிலைச் சென்றுசேர்ந்தவர்கள் அங்கேயே தங்கி இருக்கிறார்கள். ஏனென்றால், அவர்களுக்குப் பிந்திப்போய் எறும்பூருதல்போலத் தாமதித்து வழிநடக்கும் பிரயாணிகளுக்கு அவர்கள் உதவி புரிகிறார்கள். கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், மலையின் சிகரத்திலுள்ள கோவிலின் அமைப்புத் தோற்றுகிறது. கோவிலின் உள்ளே ஓர் கருப்பக்கிரகம் இருக்கிறது. கருப்பக்கிரகத்தைச்சுற்றி ஓடிவளைந்து நான்கு உட்பிராகாரங்கள் உள்ளன. இந்நான்கு உட்பிராகாரங்களையும் அடையவளைந்து கோவிலுக்குப் புறம்பாக ஓர் வெளிப்பிராகாரம் இருக்கிறது. ஓர் பிராகாரத்துக்கும்மற்றோர் பிராகாரத்துக்கும் நடுவே ஓர் மதிலுள்ளது. ஓர் பிராகாரத்திலிருந்து அதற்கடுத்த உட்புறத்திலுள்ள பிராகாரத்துக்குச் செல்லவேண்டுமானால் வழியொன்றே இருக்கிறது. ஆதலின் கருப்பக்கிரகத்திற்குச்செல்ல மதில்கள் ஒவ்வொன்றில் ஒவ்வொன்றாக வாசல்கள் நான்குள்ளன. வெளிப்பிராகாரத்திலிருந்து ஒரு ஜீவன் சந்நிதானத்துக்குச் செல்லவேண்டுமானால், நான்கு வாசல்களைக் கடக்கவேண்டும். இந்த வெளிப்பிராகாரத்தில் அனந்தகோடி ஜனங்கள் காணப்படுகின்றார்கள். உட்பிராகாரங்களில் அவ்வளவு ஜன நெருக்கமில்லை. இந்தக்கோவிலும் பிராகாரங்களும் மலையும் அம்மலையைச் சுற்றிச் சுழன்று செல்லும் பாதையும் ஜீவராசிகள் சென்றுசேரும் கதியை நன்கு காட்டும் படமாயமைகின்றன.

இந்த மலைப்பாதையில் கணக்கிறந்த ஜனங்கள் ஒருவர் பின்னொருவராக அடிமேலடிவைத்து எறும்பூருதல்போல் நகர்ந்து செல்கிறார்கள். சந்தையிற்கூட்டம்போற் றோற்றுகிறது. சாணேற முழஞ்சருக்குங் கதையாக முன்வைத்த ஓர்

அடிக்குப்பின் இரண்டடி நழுவுகிறார்களென்று சொல்லும்படி ஊர்ந்து செல்கிறார்கள். ஜீவராசிகளின் கல்பகோடி காலம் நீண்டபிரயாணம் எவ்வளவு மெதுவாக நடக்கிறது? பிரயாணத்தைப்பார்த்துக்கொண்டிருக்கிற நமக்கே கண்கள் தளர்கின்றன. பொறுமை விலகுகின்றது. மனம் வருந்துகின்றது. ஓர் ஜீவனுக்கு மலையைச்சுற்றிச்சுற்றிவர அனந்தகோடி காலம் செல்கின்றன. அனந்தகோடி ஜன்மங்கள் கழிகின்றன. இவ்விதமாய் மனுவந்தரம் மனுவந்தரமாகக் காலத்தைக்கழித்து மலையேறி வழியில் கூப்பிடுதூரம் சென்றாருமில்லை. இவர்களை நோக்கி மனம் நொடிந்துபோய், "இவர்கள் ஏன் இவ்வளவு மெதுவாய் ஏறுகிறார்கள்? இத்தனை கோடாநுகோடி ஜனங்கள் இந்தத் தொலையாத வழிப்பிரயாணம் ஏன் போகிறார்கள்? மலைச்சிகரத்திலுள்ள கோவிலுக்குப் போய்ச்சேரவேண்டுமென்று ஏன் இப்படி முண்டி முயல்கின்றார்கள்?" என்று கேட்கின்றோம்.

ஜனங்கள் இவ்வளவு மெதுவாக வழிநடந்து செல்வதற்குக் காரணம் என்னவென்று ஆலோஜித்துப் பார்த்தால், போய்ச் சேரவேண்டிய இடம் எதுவென்று தெரியாமையும், உத்தேசித்த இடத்திற்குவழி தெரியாமையும் என்று தோற்றுகிறது. அந்த மார்க்கத்தில் பிரயாணம்போகும் ஒரு ஜீவனை நோக்கிப்பார்ப்போம். அவன் சரியான பாதையிலேயே கண்வைத்துச் செல்லுகிறதில்லை. பிரயோகித்த பாணத்தைப்போல் ஒரே நோக்கமாகப் போவதில்லை. அங்குமிங்கும் பராக்கு பார்க்கிறான். எத்தனித்த காரியத்தைச் செய்யப்போகிறவன் போல் நடக்கிறதில்லை. இங்கே ஒரு புஷ்பத்தையும் அங்கே ஒரு வண்ணாத்திப்பூச்சியையும் நோக்கி ஓடியலைகின்ற சிறுபிள்ளைகளைப் போல இவன்வழிதப்பிமார்க்கத்தில் அங்கும் இங்கும்பொருந்தியுள்ள வசிகரமான பொருள்களை நச்சி அலைகின்றான். ஆதலால் இவனுக்குக்காலம் வியர்த்தமாகின்றது. பகல் சாய்ந்து இரவு வரவும் இவன் இருந்த இடத்தைவிட்டு நகர்ந்தானில்லை. எப்படிக் குணத்தில் உயரவில்லையோ அப்படியே மனோபாவத்திலும் இவன் உயர்ச்சியடையவில்லை. மனோபாவங்கள் வளர்தல் மிகவும் மெது என்றாலும் ஒரு ஜன்மத்தில் ஓர் எள்ளளவேனும் விருத்தியடையவேண்டாமா? இவனுக்கு ஓர் ஜன்மங் கழிந்து ஜன்மாந்தப்பிரளயம் வந்த காலத்தும் இருந்த இடத்

திலேயே யிருக்கின்றான். இவன் கதி இதுவாக, மனோபாவங்களைக் கொஞ்சம் சீர் திருத்தம் செய்துகொள்வதாகத் தோற்றுகின்ற வேறோர் ஜீவனை நோக்குவோம். அவனும் அதிகத் தொலை செல்லவில்லையென்று தோற்றுகிறது. இம்மியளவு தான் மேனோக்கிச் சென்றான் என்றால், "இது என்ன வழி? இது என்ன பிரயாணம்?" என்று நமது மனந்தளர்கின்றது. ஐயோ! பாவம்! இவர்கள் ஏன் அண்ணாந்து பார்த்து மலைமுடியையும், தாம் செல்லும் மார்க்கத்தையும் கவனிக்கலாகாது!

(இன்னும் வரும்)

---

# தமிழ்நூல்களும் நூலாசிரியர்களும்.

## 4. பிரயோகவிவேகத்தின் காலவரையறை.

வடமொழிப் பிரயோகவிவேகத்திலும் சொல்லிலக்கணமல்லாது எழுத்திலக்கணம் கூறாமையின் இந்நூலாசிரியரும் இதனைப் பிரயோகவிவேக மென்றார். இதன் நூலாசிரியர் வடநூலாரைப்போலத் தாமே பதிகமுமுரையுஞ் செய்தனர். அதுவே வழியாக, வைத்தியநாத நாவலர் இலக்கணவிளக்கம் வகுத்துத் தமது நூலுக்குத்தாமே உரையுமெழுதினர். சுவாமிநாத தேசிகரும் இலக்கணக்கொத்து இயற்றி அதற்குரையையுந் தாமே எழுதினர். சுவாமிநாததேசிகர் தமது இலக்கணக் கொத்துரையில்,

"நூல்செய் தவனந் நூற்குரை யெழுதன்
முறையே யெனிலே யறையக் கேணீ
முன்பின் பலரே யென்கண் காணத்
திருவா ரூரிற் றிருக் கூட்டத்திற்
றமிழ்க்கிலக் காகிய வயித்திய நாத
னிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதின
னன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக
ரப்பதி வாழுஞ் சுப்பிர மணிய
வேதியன் றமிழ்ப்பிர யோக விவேக
மூரைத்துரை யெழுதின் னென்றே பலவே"

என்றுரைச் சூத்திரமுஞ் செய்தனர். ஆதலின் இலக்கணக்கொத்துக்கு முந்தியது பிரயோகவிவேக மெனத்தெளிக. இச் சுவாமிநாத தேசிகர் கல்லாடத்துக்கு உரையெழுதின மயிலேறும்பெருமாள் பிள்ளையின் மாணாக்கர். சுவாமிநாததேசிகரது மாணாக்கர்களிலொருவர் நன்னூற்கு விருத்தியுரை செய்த சங்கரநமச்சிவாயர். ஆகவே, பிரயோகவிவேகக்காரர், மயிலேறும் பெருமாள்பிள்ளை, வைத்தியநாதநாவலர், சுவாமிநாத தேசிகர், சங்கரநமச்சிவாயர் இவர்களைவரும் முற்றும் ஒரே காலத்தவரல்லராயிருப்பினும் ஒருவருக்கொருவர் ஏறக்குறைய சமீபித்த காலத்தவராயிருத்தல் வேண்டும்.

2. மேலும் பிரயோகவிவேகக்காரர், தமது பிரயோகவிவேகம் நாற்பதாவது பாடலின் உரையில், "நாநார்த்தபதத்தையெல்லாம் அப்பதீட்சிதர் ஏகநாலாவலம்பி பலத்துவந்துவம் போலவென்று திருட்டாந்தங் கூறி, ஒருகாலுரைக்கவே பலபொருளிற் பிரவிருத்தி நிமித்தம் ஒருங்கு தோன்றுமென்றுங் கூறுவர்" என்றார். ஆதலின் இவர் அப்பதீட்சிதருக்குப் பிற்பட்டகாலத்தவரென்க. அப்பதீட்சிதர் இயற்றியஆத்மார்ப்பணஸ்துதியின் ஏழாவது சுலோகத்தின் உரையில், அந்நூலுக்கு உரைசெய்த சிவாநந்தயதி அப்பதீட்சிதருடைய ஜனனகாலம்கலிவருஷம் 4654 (கி. பி. 1554) க்குச் சரியான பிரமாதீச வருஷம் புரட்டாதி மாதம் கிருஷ்ணபட்சத்துப் பிரதமை உத்திரட்டாதி நாள் கன்னியாலெக்கினம் என்று கூறியிருக்கிறார்.

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | சனி ராகு | செவ்வாய் |
| | ஜனனலெக்கினம் கன்னி | | |
| குளிகன் | | | |
| வியாழன் | கேது | சுக்கிரன் | ல. சூரியன் புத. |

மேலும் அவர் பிறந்த காலத்தில் கோள்கள் நின்ற நிலைமையையும் மேற்படி உரையாசிரியர், நாம் இங்கேகாட்டியிருக்கிறபடி, அங்கெடுத்துக் கூறியிருக்கிறார்.

(காசியில் தசாசுவமேதகட்டத்து அமரமுத்திராட்சரசாலையில் பதிப்பித்த ஆத்மார்ப்பணஸ்துதி, 19-வது பக்கம் பார்க்க.)

அப்பதீட்சிதர் எழுபத்திரண்டு வயது ஜீவித்திருந்தார். இச்சங்கதி அவரது இளைய சகோதரரின் பௌத்திரரான

நீலகண்டதீட்சிதராலியற்றப்பட்ட சிவலீலார்ணவம் என்னும் மகாகாவியத்தின் முதலாவது சருக்கம் 6-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், அப்பதீட்சிதருடைய காலம் கி. பி. 1554 முதல் கி. பி. 1626 வரையில் எனத்திட்டமாய்த் தெரிகின்றது. ஆகவே அக்காலத்துக்குப் பிற்பட்டவர் பிரயோகவிவேகக்காரரென்பது திண்ணம்.

3. பிரயோகவிவேகம், 50-வது பாடலின் உரையில், "இந்நூலுட் சந்தேகந்தோன்றுவதனை மகாபாடியம், கையடம், சித்தாந்த கௌமுதி, சத்தகௌமுதி, வாக்கியபதீயம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்தகௌத்துவம் கற்றவரைக் கேட்க. காசிகாவிருத்தி, பிரக்கிரியா, கௌமுதி என்னுமிரண்டினும் சித்தாந்தம் பிறவாதாதலின், அவை கற்றோரைக் கேளாதொழிக," வென்றார் பிரயோகவிவேகக்காரர்.

சித்தாந்தகௌமுதி சத்தகௌத்துவம் இவ்விரண்டினையுஞ் செய்தவர் பட்டோஜிதீட்சிதர். அவர் கி. பி. 1604-வது வருஷம் முதல் கி. பி. 1626-வது வருஷம் வரையில ரசாண்ட கேலடி வெங்கடப்பநாயகர் காலத்தவர். (Vide Report on Sanskrit Manuscripts in Southern India by Dr. E. Hultzsch, No. II page XII and Mr. Sewell's List of Antiquities Vol. II page 77.) இதனாலும் பிரயோகவிவேகக்காரர் கி. பி. 1626-வது வருஷத்திற்குப் பிற்பட்டவரெனத் தெளிவாகத் தெரிகின்றது.

சத்தகௌமுதி இயற்றியவர் சோக்கநாததீட்சிதர். இவர் வியாகரணபாஷ்யத்திற்கு பாஷ்யரத்னாவளி யென்றொரு வியாக்கியானம் எழுதியிருக்கிறார். அந்நூலெழுதுங்கால், தமக்கு இருவிதமாகவும்பொருளுதவிசெய்தனர் நீலகண்டதீட்சிதர் என்பதாக அந்நூலின் றுவக்கத்தில் கூறியுள்ளார். அதாவது, சந்தேகம் நேர்ந்தவிடத்துத் தமக்குப் பொருள் கூறியும், இல்லறத்துக்குரிய காரியங்களை நடாத்த முட்டின்றித்தமக்குப் பொருள் கொடுத்துமுதவினரென்பதநன் கருத்து. நீலகண்டதீட்சிதர் தமது நீலகண்டவிஜயசம்புகாவியத்தைக் கலிவருஷம் 4738 (கி. பி. 1638)ல் செய்து வெளியிட்டது மேற்படி நூலிலேயே சொல்லப்பட்டுளது.

4 இது நிற்க, பிரயோகவிவேகக்காரர் பிரயோகவிவேகம் 51-வது பாடலில் தமது நூலைத் தற்காலத்தில் சத்தசாத்தி

ரங் கரைகண்டவராய் விளங்கின இராமபத்திரதீக்கிதரிடம் காட்டப்புகுவதாயும், பிறகு அதற்கடுத்த பாடலில் இராமபத்திரதீக்கிதர் தமது நூலை முடிவுபெறக் கேட்டு ஏற்றுக்கொண்டாராதலின் இனிப்பதஞ்சலிதான் கேட்டாலென்ன கேளாக்காலென்ன என்னுங் கருத்துப்பட வெளிப்படையாயுஞ் சொல்லியிருக்கிறார். அப்பாடல்களாவன:—

"சீதள சுந்தர முகராமபத்திரதீக்கிதர்க்குப் [யேன்
போமொடு சென்று புகல்வோ மவர்க்கும் பொழுதில்லை
மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்தன்னைப்
பேதமிலாத பதஞ்சலி பாற்சென்று பேசுவமே.
பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்று—னேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணூற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கா லென்.
உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை
யைம்பத் தொருகவிதை யாலுரைத்தான்—செம்பொற்சீர்
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப் பிரமணிய
னென்னு மொருவே தியன்."

மேலே குறிக்கப்பட்ட இராமபத்திரதீக்கிதர் "நவீனபதஞ்சலி" யென்று தற்காலத்தில் பட்டம் பெற்றவர். சத்தகௌமுதி, பாஷ்யரத்நவளி முதலிய இலக்கண நூல்களை யெழுதின சொக்கநாததீக்கிதரின் மருகன். மேற்படியாரிடம் சத்தசாத்ரத்தை முற்றுங் கற்றுணர்ந்தவர். கி. பி. 1638-வது வருஷத்தில் நீலகண்டவிஜயசம்புகாவியம் இயற்றிய நீலகண்டதீட்சிதரால் மிகக் கொண்டாடப்பெற்றவர். கி.பி. 1693-வது வருஷத்தில் தஞ்சாவூர் மகாராட்டிய அரசனை சகஜியால் திருவியலூரில் (திருவிசலூர்) நான்குவேலி நஞ்சை நிலமும் ஒருவேலி புஞ்செய் நிலமும் அக்கிரகாரத்தில் ஒரு வீடும் இன்னும் அநேக வெகுமதிகளும் கிடைக்கப்பெற்றவர். (Vide Indian Antiquary Vol XXXIII P. 132)

ஆகவே பிரயோகவிவேகம் இயற்றிய சுப்பிரமணியதீட்சிதரின் காலம் கி. பி. 17-வது நூற்றாண்டின் இறுதியும் 18-வது நூற்றாண்டினது துவக்கமுமாமென்பதற்கையமில்லை. பிரயோகவிவேகத்தின் காலமும் அதுவேயாம்.

**T. S. KUPPUSWAMI SASTRI.**

# எமெனயிட்.

(69-ம் பக்கத்தொடர்ச்சி.)

கவனிப்பு: இதில்கூறிய சமுத்திர ராஜனுடைய ஒழுக்கத்தை நோக்குங்கால், ஸ்ரீ கம்பராமாயணத்தில் சுந்தரகாண்டத்தில் எடுத்துக்காட்டப்பட்ட ஸ்ரீ ஆஞ்சனேயரின் தருமநெறி ஞாபகத்துக்கு வருவதால், அதில் மூன்று கவிகளை இதன் பொருள் தெளிவு பெறும்பொருட்டுக் கூறலாயினேன்.

(1) விழைவுநீங்கிய மேன்மையோராயினுங்
   கீழ்மையோர் வெகுள்வுற்றால்
பிழைகொனன்மை கொல் பெறுவதென்னறையுறு
   பீழையாற் பெருந்தென்றல்
உழையர்கூவப்புக்கே தெனப்பெயர்வதோ
   ஏசலினுளதாகும்
பழையம்பாமெனப்பண்பில செய்வரோ
   பரிணிதர்பயனோர்வார் —ஊர்தேடுபடலம் 198.

(2) என்றாக்கியெயிறுகடித்திருகரனும்பிசைந்தெழுந்து
நின்றாக்கியுணர்ந்துரைப்பானேமியோன்பணியன்றால் [ல்
ஒன்றாக்கியொன்றிழைத்தஉணர்வுடைமைக்குரித்தன்று
பின்றாக்கினிதுசாலப்பிழையாகுமெனப்பெயர்ந்தான்.

(2) ஆலம்பார்த்துண்டவன்போலாற்றலமைந்துளரெனினும்
சீலம்பார்க்குரியோர்களெண்ணாதுசெய்பவோ
மூலம்பார்க்குறினுலகைமுற்றுவிக்குமுறைதெரினும்
காலம்பார்த்திறைவேலைகடவாதகடலொத்தான்

ஷை 221, 222

இவ்வாறு நெப்ட்யூன் கூறி வாய்மூடுவதின்முன், கொதிகொண்டெழும்பிய சமுத்திரமும் அமர்ந்து, வானத்தைக் கவ்விய மேகமும் ஒதுங்கி, விழுங்கப்பட்டிருந்த சூரியனும் மீண்டு பிரகாசித்தார். அவருடைய பரிவாரங்களாகிய நாகலோகத்தார் பாறைகளின்மெல் ஏறுண்ட கப்பல்களை நிமிர்த்தவும், அவரும் அவைகளைச் சூலாயுதத்தால் ஜலத்தில் சேர்ப்பித்துப் பிரமாண்ட மண்மேடுகளை ஒதுக்கிச் சமன்செய்து

சமுத்திரத்தையும் சுபாவ அமரிக்கைக்குக் கொண்டுவந்து, தானும் அதன்பேரில்மெல்லிய ரதாரூடராய்ச்சவாரி புரிந்தார். யோசித்துத்திருஷ்டாந்த பூர்வமாய் இவ்வரலாற்றைச் சொல்லுங்கால், அஞ்ஞான சொரூபிகளாகிய ஓர் பிரமாண்ட பாமரக்கூட்டத்தில் யாதுகாரணத்தை முன்னிட்டோ கலகம் ஏற்பட்டுக் கோபாக்கினியால் அவர்கள் மனம் தகித்து, சாது மீறினால் காடு கொள்ளாதென்றுமமதையே ஆயுதமாய்ப்பூண்டவர்கள் கைக்கெட்டினது கல்லோ, மரமோ, கனலோ, புனலோ யாவையும் தண்டாயுதமாய்க் கொண்டு போர்புரியும் வேளையில், தெய்வபக்தியிலும், குணதிசயத்திலும் விசேஷித்த அறிவு ஸ்ரூபியோ சித்தயோகியோ அவ்விடம் பிரஸன்னமானதும், முன்கூறிய பலபட்டறைக்கூட்டத்தார் கலகமடங்கி மௌனமுற்று வைத்தகண் களும் செலுத்திய சிந்தையும் செவியும்வாங்காது திகைக்கவே, அந்த ஞானஸ்ரூபி அவர்களின் குரோதாதிகளை அடக்கி அவர்களைத்தன் வசமாக்குகிறானன்றோ? அவ்விதமே சாந்தமூர்த்தியாகிய நெப்ட்யூன் ஆகாசவாணியாய் வாசிபூண்ட ரதாரூடராய்ச் சமுத்திரத்தின் மேல் எழுந்தருளிச் சவாரி புரியவே, சமுத்திரத்தின் அடங்காத கலகமும் அடங்கியது: *

"வஞ்சமுங்களவும்வெஃகி வழியலாவழிமேலோடி
நஞ்சினுங்கொடியராகி நவைசெயற்குரியநீரார்
வெஞ்சினவரக்கரைவ ரொருவனேவெல்லப்பட்ட
அஞ்செனும்புலன்களொத்தா ரவனுநல்லறிவையொத்தான்"

பஞ்சசேனாபதிகள்வதைப்படலம், 64.

(இன்னும் வரும்)

**A. சிவக்கொழுந்து முதலியார் B. A.**

* கவனிப்பு;—ஏற்கனவே முகவுரையில் நான் கூறியபிரகாரம் இக்காவியத்துக்கு நிகர் ஸ்ரீ ராமாயணமானதால், அடிக்கடி ஸ்ரீ கம்பராமாயணத்திலிருந்து பாடல்களைத்திருஷ்டாந்தமாக எடுத்துக் கூறும்படி நேருகிறது.

(ஓர் போர் வீரன் பிரவேசித்து)

வீரன். பார்த்திப! நமது பாசறை வாயிலில்
வார்த்தை கொண்டு வந்தன னொருவன்.

வீரசே. தருக! (அரியநாதன் உள்ளே பிரவேசிக்க)

அரிய. தந்திரந் தழைத்த காவல!
அருகு வந்தது—"இங் கவிர்மதிக் குலத்தான்
அரசு தந்தவ னடிவணங் குதியோ?
வினைசெய் தாரணி வெற்றிவே ளகமன்
கணைவழி யாவி கலங்க நிற்றியோ?
பணைவளஞ் சூழப் படைத்தநின் னாட்டைக்
காத்திட நினைதியேல், கன்னிநா டொரீஇத்
தீத்தொழில் விட்டுன் றேயமா ளுதியோ?
இந்நா டிரண்டையு மிழந்து சாதியோ?"
என்னு வறிந்து வாவென வியம்பினன்;—
வந்தன னிதுவென் வரவுக் கேது. நின்
சிந்தனை யாவுஞ் செப்புக நினைந்தே.

வீரசே. (சிந்தனை தோன்றச் சிரித்து)
பற்பல வுரைபோற் பகரக் கற்றிலன்,
விற்படு கணையால் விளம்புவ னுனை,
வைகை நாடதை வழங்க மாட்டேன்,
உய்கை நாடி யுயிர்பிழைத் தோடுமின்!
(அரியநாதன் வெளியே செல்ல)
கேட்டிரோ! தூதன் கிளந்த மொழியெலாம்!
நாட்டினை விட்டு நயந்து போவதாம்!
அல்லது தொல்லை யரும்பதி தன்னையு
மெல்ல விழந்து விழுந்து சாவதாம்!
குபேரன் வில்வலன் குன்றி நிற்பதாம்!
விபோ! என் றவனடி வீழ்ந்து பணிவதாம்!—

குபேர.. பக்க தேவர் பகர்ந்த சூழ்ச்சியோ?
கொக்கின் றலையிற் கொதிப்ப வெண்ணெயை
வைத்துப் பிடிக்கும் வார்த்தை போலாம்!
கைத்த மொழியெலாங் கருதலென் பயனே?
நாளைப் பொழுதே நமக்கு வெய்யபோர்!
காளைய ரியாருங் காமின்! காவல!
இன்றிர வினிதா விருந்து துயில்க!

குன்றின் றிரவி குதித்தெழு காலை,
வென்றி மடந்தை விழைந்து
நின்றிட, வீர நிலைத்திட வெழுவாம்!

முதற்களம்—முற்றும்.

## அங்கம்2. களம் 2.

நாகமன்படையும் இருகூறாகப் பிரிக்கப்பட்டது. அவ்விரு படைகட்கும் முறையே நாகமனும், அரியநாதனும் தலைவராவர். யுத்தகளத்தில் வீரசேகரன் படை நாகமன்படையை எதிர்த்து நிற்க, அரியநாதன் கோலாகலனை எதிர்த்தான். அரியநாதன் தனது ஆயிரங்காலாட் படைகளையும், நாலாயிரங் குதிரைப் படைகளையுங் கொண்டு அரியபோரிட்டு ஓடிப்போன பகைவர் இருநூற்றுவரொழிய மற்றை யாவரையும் கொன்றனன். கோலாகல னுயிரும் கவரப்பட்டது. தனது பக்கத்து ஐந்நூறு வீரர்கள் மாண்டதைக் கொண்டு மிகவும் மனம் வருந்திக் காயப்பட்ட எண்ணூறு வீரர்களையும் தக்க விடுதிகளுக்கனுப்பி மேன்படை வீட்டிலே தங்கியிருந்த தளகர்த்தன் சதாசிவராயனுக்குக் கடிதம் அனுப்பினன். சதாசிவராயன் எண்ணூறு வீரர்களைச் சேர்த்துக் கொண்டு அரியநாதனைச் சேர்ந்தான்.

இக்களத்தில் அரியநாதன் வரலாறு செவ்வையாய்ச் சதாசிவராயனால் வீரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

## அங்கம் 2. களம் 2.

இடம். நாகமன் மேன்படைவீடு. காலம். நண்பகல்.

(ஓர் ஒற்றனும் நான்கு காலாட்களும் நின்று உரையாட.)

(நேரிசை ஆசிரியப்பா)

ஒற்றன். காலாள்! இன்று காலையி னடந்து
கோலிய போரிற் கொற்றங் கொண்டதா
விளம்பினை; யாவும் விரித்துக் கூறுக—
களத்தின் மாண்ட கருதலர் செயலும்,
கோலா கலனுயிர் கொண்ட வாறும்,
நாலா வகைப்படை நலிந்த விதமும்,
மேவலர்ச் செகுத்த வீரன்
மூவறு யரிய நாதன் றகவுமே!

முதற்காலாள். சண்டை யென்றால் சண்டையா! அரியநாதர் சண்டையல்லவா சண்டை! காலாட்கள் இருபதுவரிசை. ஐந்நூறு பேர் வாட் பிடித்தவர்கள். ஐந்நூறு பேர் விற் பிடித்தவர்கள். குதிரை வீரர்கள் நாலாயிரம். அங்கங்கே கொடித்தலை வீரர்கள் நின்றார்கள். ஆனைகுண்டு சேப்பண்ணு, வெங்கிடகிரி வரதராயர், ஜம்புராயர், சித்தூர் விக்கிரமராயர், துப்பாக்கி கிருஷ்ணப்ப நாயுடுகாரு!

2-ம் கா. அடடே, இதெல்லா மென்னடா? இவர் கேட்டதற்குப் பதிலா?

1-ம் கா. ஒரே போடு பார்த்துக்கொள்! சாக்கிரதை!

2-ம் கா. மீசை துடிக்கிறது, வீரப்பனுக்கு மீசை துடிக்கிறது!

1-ம் கா. உனக்குக்காலம் கிட்டிவிட்டது; சொல்லுகிறேன், கேட்கமாட்டேன் என்கிறாய்! (வாளையுருவிக்கொண்டு) இந்தா! ஒரே குத்து!

ஒற்றன். அடே! சண்டைபோடாமற் சொல்லுங்கள்.

1-ம் கா. சண்டையா? ஒரே பிண்டமாய்ப் பிடித்துக் காற்றிலே ஊதிப்போடுவேன்! நேற்று வந்த பயல்!

2-ம் கா. (தனியேநின்று) இவர்காற்றிலே ஊதுவார்!

ஒற்றன். அடே! மறுபடியும் சண்டை வேண்டாம். நடந்த வரலாற்றைச் சொல்லுங்கள்

1-ம் கா. ஐயா, முடியாது! இந்தப்பயல்! புத்தியில்லாத முண்டம்! என் முதுகிலே ஒளிந்தபயல்! பீரங்கிக் குண்டைப் பார்த்துக் கொட்டாவிவிட்டபயல்! இந்தப் பயலுள்ள மட்டும் நான் இங்கே வரவில்லை! (வெளியேசெல்ல)

2-ம் கா. மோசந்தான்! பீரங்கிச் சத்தத்தைக் கேட்டுக் கிணற்றிற்குள்ளே ஒளிந்த பயலையா இவன்! எனக்குக் கடுக்காய் கொடுக்கிறான்; போகட்டும், போகட்டும்! நான் சொல்கிறேனையா வரலாறு, கேளுங்கள்! நமக்கெல்லாம் பீரங்கிக் குண்டு விடும் வித்தையைப் போர்த்துக்கியர் சொல்லிக்கொடுத்தார்களல்லவா? அந்த வித்தை எங்களுக்கு உதவியாயிற்று. படையிரண்டுங் கைகலந்தன. கண்ணெடுத்துப்பார்க்க முடியவில்லை. கூப்பிடுதொலைக் கப்பாலே, ஆனை நடுவில் நுழைந்தாலும் தெரியாது; புல்லு வளர்ந்து கிடந்தது. அங்கே படுத்துப் பதுங்கிக் கிடந்தார்கள். சண்டை உண்டாயிற்று, பார்க்கிறவர்கள் கண்கள் பஞ்ச

டைந்தன. ஆகாசம் மூடப்பட்டது. வீரர்களும் வீரர்களுந் தாக்கினர்கள்,—வாளொடு வாள், வில்லொடுவில், அம்போடம்பு, காலொடுகால்,—என்ன சண்டை? சொல்லியா சாத்தியம்? கொஞ்சநேரம் ஒன்றுந்தெரியவில்லை. விழித்துப் பார்க்கிறேன். தூளிதூளியாப் புறப்படுகிறது. ஆகாசம் செவந்து போயிற்று. ஒரு பெரிய ஏரியிலே, அலை ஒன்றோடொன்று மோதுகிறதுபோல, முந்துகிறது, பிந்துகிறது, நடுங்குகிறது, துவசம் விழுகிறது, துவசம் கிளம்புகிறது; எக்காளம் ஒலிக்கிறது, எக்காளம் சாகிறது, ஓ ஓ ஓ ஓ ஓ என்று இறைகிறது, ஆ அ அ அ அ என்று அழுகிறது; கொஞ்சநேரம் பார்த்தேன், கோலாகலன் சேனை பின்னிட்டது. புல்லுப்புதர்களிலிருந்து குண்டு குளம்பிவிட்டது. ஒன்று, இரண்டு, ஆயிரம், பதினாயிரம், கோடி, கணக்கில்லை! ஓடுகிறார்கள், விழுகிறார்கள், கிளம்புகிறார்கள், பதுங்குகிறார்கள், தியங்குகிறார்கள்; என்ன பண்ணி என்ன? உதைபடுகிறார்கள்! ஓடுகிறவர்கள் மேலே குதிரை ஏறுகிறது, குண்டு பாய்கிறது, இரத்தம் ஊத்துகிறது!

3-ம் கா. நம்முடைய பக்கத்திலே கேட்பானேன்? தப்படிக்கிறது, கொம்பூதுகிறது, கொடிபிடிக்கிறது; ஒரு பக்கம் ஜம்புராயர் நகார் பிளக்கிறார். ஆனைகுண்டு சேப்பண்ணு பம், பம், பம், பம், பம்மென்று சங்கூதுகிறார்!

4-ம் கா. போடா! சும்மா சும்மா அளக்காதே! நம்முடைய பக்கத்திலே எத்தனைபேர்களிறந்தார்கள்? எத்தனை பேர்கள் காயப்பட்டார்கள்? அதையெல்லாம் எடுத்துச்சொல்லுகிறாயா? குப்பல் குப்பலாகக் கைபோனமுண்டம், கால்போனமுண்டம்,—ஆ! ஆ! மெய்கூசுகின்றது! காக்கை, கழுகு, பருந்து வட்டமிடுகின்றன! "தண்ணி, தண்ணி", என்கிறான். தண்ணிகொண்டுவர ஒருவன் இரும்புத் தலைப்பாகை எடுத்துக்கொண்டு ஓடினன். பக்கத்தில் ஓர் கால்வாய். அதில் தண்ணி எடுக்கக் குனிந்தான். இரத்தம் கட்டி கட்டியா விழுகிறது! தள்ளித் தள்ளிப்பார்த்தான்; எடுக்க, எடுக்க இரத்தம்! ஐயோ! பாவம்! எங்கே போவான் தண்ணிக்கு? குமுதன் இரத்தத்தையே வாரிக்குடித்தான்!

ஒற்றன். நல்லது! எத்தனைபேர் சுமார் இறந்துபோயிருப்பார்கள்? எத்தனைபேர் காயம்பட்டிருப்பார்கள்?

2-ம் கா. யாருக்குத் தெரியும்? சுமார் ஐந்நூறு, அறுநூறு பேர் செத்துப் போயிருக்கலாம். எழுநூறு, எண்ணூறு பேருக்குக் குறைந்தா காயப்பட்டிருப்பார்கள்?

3-ம் கா. அவர்கள் சேதியென்ன?

2-ம் கா. என்ன! ஓடிப்போனவர்கள் இருநூறு பேர் இருக்கலாம். மற்றவர்கள் எல்லாம் போனவர்தாம்!

3-ம் கா. இதெல்லாங் கிடக்கட்டும், கேளுங்கள்! அரியநாதர் சண்டையே சண்டை! நல்ல அரபிக் குதிரை, அந்தச் செகப்புப்புள்ளி வெள்ளைக் குதிரை எசமானன் சொற்படியே கேட்கும். அரியநாதர் கையில் ஒரே பட்டாக்கத்தி. கோலாகலன் மேலே பாய்ந்தார். குதிரையும், குதிரையுந் தாக்கின. கோலாகலன் வாளாலே நேரே தலையைக்கட்டி ஒரு போடு போட்டான். என்ன? நாதரா பின்வாங்குவார்? அப்படியே ஒருவளைச்சல் வளைந்தார்; கத்தியை நீட்டினார், கோலாகலன் வாள் தூளாப்போயிற்று! இவர் முனைந்து ஒருவெட்டு வெட்டினார். அவ்வளவுதான்! கோலாகலன் கக்கரிக்காய்தான்! சங்கத்தை ஊதினார், முண்டத்தை உருட்டினார், தலையைக்கொண்டேபோய் விட்டார்! அப்புறம் என்ன? சண்டையேது? சேனை ஏது? எல்லாம் போய்விட்டது.

4-ம்.கா. ஐயா, இந்த அரியநாதர் யார்? எந்த ஊரிற் பிறந்தார்? வளர்ந்தார்? எமனைக வல்லவா வந்திருக்கிறார்! இவர் கதையைக் கொஞ்சஞ் சொல்லுங்கள்.

சதா. (ஒட்டுக்கேட்டு உள்ளேபிரவேசித்து)
அடே, அரியநாதன் வரலாறு தெரியாதவருண்டோ? கேளுங்கள்! சொல்லுகிறேன்.

(நேரிசையாசிரியப்பா)

தொண்டைநா டென்னுந் தோகை முகமெனப்
பண்டைநா ளமைந்த பதியெனுங் காஞ்சி
தன்னிலே, பரந்து தழைத்த மெய்ப்பூ
டென்னுங் கிராமக் திசைபெற வந்தோன்!
வேளாண் குடிக்கோர் விளக்கே போல்வான்!
தாளாண் மைக்கோர் தலைவன்! நான்கொடு
முப்பது சென்ற முன்னுணர் டுணர்ந்தோன்!

பைப்பணி தலைமேற் படிந்துநின் றூடச்
சிறுவனங் கொருபாற் றிகழ்தரக் கண்டு
மறுவறு மறைவர் மந்திரி யாவனென்
றுரைத்தனர்! கணித வுண்மைநூல் கடந்தோன்!
திரைக்கதி போலத் திகழுங் கொய்யுளைப்
பரிமா வோட்டவிற் பாண்டவர் நகுலன்!
செருவலன்! பொர்த்துகற் சேனை பதியாம்
ஒப்பிரைக் கிரிஸ்டோ வோதிவி கூரிதோ
தப்பிலாக் குண்டு தைத்திடுங் குழலாம்
பிரங்கிப் படைப் பிரயோ கஞ்செல
நேர்மையிற் கற்ற நிபுணன்! வில்வாட்
பயிற்சியில் வல்லவன்! பல்படை விநோதன்!
எயில்வளைத் திடுதலி லேற்ற முடையோன்!
இன்னவன் வயதா யிரத்தைந் நூற்றுப்
பன்னிரண் டெனப் பகர்தரு மாண்டில்
இருபத் தாறென் றியம்புவர்; காகமன்
செருவித் தாரச் சேனைத் தலைவனாய்,
அவனுக் குதவியா யமைந்த வீர
னிவனே யென்ன வேத்திட நின்றோன்!
அற்றைநாட் டொடக்க மான ரேய்ச்சூர்
முற்றுகை, ஐந்து மூன்று நூறுடன்
கொண்ட பதின்மூன் றாண்டில், கோல
கொண்டா சுல்தான் கூலி குட்புஷா
சொல்லரும் போரிற் சூழ்ந்தவன்! பீடர்
சுல்தான் அல்லா வுதீன் மாதுஷா
சண்டையென் றவன்! சிவ சமுத்திரத் தோடு
பண்டுசீ ரங்க பட்டண முற்றுகை
கிடத்தினன்! உதய கிரிப்போர் வல்லான்!
திடமுள கிருஷ்ண தேவ ராயனும்
மன்னவ னோடு, முதன் மந்திரி சோதரர்
தன்னுடைப் புத்திரர் சகுநாடெந்தில
கோப மந்திரி, குடையிள வரசர்,
மாபுகழ் கொண்ட திம் மாஜி பண்டிதர்,
தம்பிறைக் குறுதி தணைப்புகல் சாலுவ
திம்ம னதியர் சேரத், திருவளர்

தன்னின் மதிக்கத் தக்க புகழோன்!
மன்ன னிராஜ மகேந்திரஞ் சென்றவண்,
உரிய ராயரோ டுடன்ப டிக்கையைப்
புரியத் தூது போனவன்! ரேய்ச்சூர்
எழுதர முற்றுகை யிவனால் வெற்றியே
பழுதற நாமும் படைத்தது! இஸ்மே
லலிக்கிவன் பெயரை யறைந்திடின் மெய்ம்மயிர்
சிலிர்த்துளந் தளர்ந்து சிங்கசொற் பனமாம்!
அவன்தள கருத்த னஞ்சலா பத்கா
னிவற்குச் சலாஞ்செய் திருக்கிறான்! இவனையே
புண்ணிய மகம்மது போற்கொண் டாடுவர்!
கண்ணிய மெல்லாங் கருதி உம் மாதுஷா
அமீர்பி ரீதோ டனைவரு மிந்நாள்
எமையாள் பவனென் றிருப்பர்! உலகோர்
என்னே பலபட வியம்புவ துளது?
நன்ன டத்தையே நயந்தவன்! உள்ளங்
கரைந்துநின் றெளியரைக் காப்பதி னுலகம்
புரந்தருள் செய்யும் புகழ்த்திரு மாலே!
கண்டக ராவி கவர்வதிற் கையிலையிற்
கொண்ட வரனெனக் கூறத் தகுமால் !
தருமத் தாபனஞ் செய்வதிற் சரோருகப்
பிரமனென் றிவனைப் பேசவும் படுமே!
ஆதலி னிவன்செய லனைத்து மோர்ந்து
மேதினி யுள்ளார் விரும்பிப் பின்றைநாள்
இவற்கிங் காலய மொழில்பெறக் குயிற்றி,
யுவப்புட னிவன்புக ழோதியு நிற்பரால்!
அன்றியும், புகழ்சா லரிய நாதன்
வென்றியுங் குணமும் விநயமு நாளும்
பார்ப்பத் தனது பக்கத் திரானேல்,
போர்ப்புலி நாகமன் பொழுதுபோ காதுகாண்!
இத்தகை யரிய நாதனுக் கிந்த
கத்துவா ரிதிபோற் கலந்து நின்ற
காலாட் படையைக் கலக்கிக் களத்திற்
கோலா கலனுயிர் கொண்டவன் சேனையை
யாசறக் கொன்றன னென்ன வனைவருட்

பேசிய தவற்குப் பெருமை யாகுமோ?
நல்லது! நிற்க, நாடுமின்! ஆங்கண்
தொல்லை வாயுவுந் தோற்கு மாறு
நாடி யொருவ னம்பால்
ஒடி வருகிறுன்; ஒதுங்குமின்! ஒதுங்குமின்!

(ஓர் ஒற்றன் பிரவேசித்துச் சதாசிவாராயனிடத்தில் ஓர் கடிதத்தைக் கொடுக்க)

சதா. (கடிதத்தைப் படித்து.)

வீரர்களே கேட்பீராக! படைத்தலைவர் கடிதத்தைப் படிக்கின்றேன்.

"..............................................................................

போரில் வெற்றிகிடைத்தது, கோலாகல னுயிர் கவரப்பட்டது. இதுநிற்க, நமது வீரரில் இறந்தவர் தொகை ஐந்நூறு. இவர் நிலையைக் காண வென்மன மிரங்குகின்றது. இறந்தவரை யடக்கஞ்செய்வதும், காயம்பட்டவர்களை டோலிகளிலேற்றிப் பாசறைக் கனுப்புவதுந் தொழிலாகக் கொண்டு நின்றனன். மற்றோர் சார், நாகமனுக்கும் வீரசேகரனுக்கும் நடக்கும் போரிலிருதிறத்தாரும் ஒத்திருத்தலை யொற்றர் கூறக் கேட்கின்றனன். விரைவி லவனுக் குதவிபுரிய விரும்பினன். ஆதலின் பாசறையை நோக்கிப் போந்த பாடுற்ற நமது வீரர்சட்குத் தகுந்த விடுதிகளமைத்து மருத்துவன்பால் விடுத்து, எண்ணூறு வீரர்களை யணிவகுத்த படையுடன் நம்பால் விரைந்து வருக—

இங்ஙனம்,
அரியநாதன்."

(நேரிசை யாசிரியப்பா.)

வீரர்காள்! ஈங்கு வீணே நிற்ப
நேரமோ வில்லை! நீவிர்! கேண்மின்!
கொடியினுங் கோல நோக்குமா றுறுவன்;
கடிதி னேகிக் கைப்படை கலப்ப
நாமு மரிய நாதனைச்
சேம மாகச் சேருதும் விரைந்தே!

## 2-ம் களம்.

முற்றிற்று.